# 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறிந்துகொள்ளும் உரிமைச் சட்டத்தின் நடைமுறைப்படுத்தல் தொடர்பில் இந்த சட்டத்தின் 10 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக சமர்ப்பிக்கப்படவேண்டிய ஆண்டறிக்கை

**2023**

**அமைச்சரவை அலுவலகம்**

லொயிட்ஸ் கட்டிடம், சேர் பாரோன் ஜயதிலக்க மாவத்தை, கொழும்பு - 01.

www.cabinetoffice.gov.lk

## பொருளடக்கம்


| | விபரம் | | பக்கம் |
|---|---|---|---|
| 01. | பகிரங்க அதிகாரசபை பற்றிய விபரங்கள் | - | |
| 02. | அமைச்சரவை அலுவலகமும் அதன் பணிகளும் | - | |
| 03. | தகவல் அலுவலரினதும் குறித்தளிக்கப்பட்ட அலுவலரினதும் விபரங்கள் | - | |
| 04. | இணக்கம் தொடர்பிலான மீளாய்வு | - | |
| 05. | ஆண்டினுள் கிடைக்கப்பெற்ற தகவலுக்கான கோரிக்கைகள் பற்றிய விபரம் | - | |
| 06. | தகவலுக்கான கோரிக்கைகளின் வகைகள் | - | |
| 07. | தகவலுக்கான கோரிக்கையாளர்கள் பற்றிய விபரங்கள் | - | |
| 08. | தகவல் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதன் காரணமாக எவரேனும் ஒருவருக்கு எதிராக தண்டனை விதித்தல் அல்லது ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் | - | |
| 09. | மேன்முறையீடுகளும் ஆணைக்குழுவின் ஆலோசனைகளும் | - | |
| 10. | தகவல்கள் முகாமைத்துவமும் அறிக்கைகளை பேணுதலும் | - | |
| 11. | அறிக்கைகளை பேணுதல், முகாமை செய்தல் மற்றும் அது தொடர்பிலான தடைகளை தவிர்ப்பதற்கான பரிந்துரைகள் | - | |
| 12. | தகவல்களை அறிந்து கொள்வதற்கு பிரசைகளுக்கு கிடைக்கக்கூடியதாகவுள்ள வசதிகள் | - | |
| 13. | தகவல் கோரிக்கைகளுக்கான கட்டணங்களாக 2023 ஆம் ஆண்டினுள் அறவிடப்பட்ட கட்டணங்கள் | - | |
| 14. | தகவல் அறிந்துகொள்ளும் உரிமைச் சட்டத்தின் செயற்பாடு மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள் | - | |

**2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறிந்துகொள்ளும் உரிமைச் சட்டத்தின் நடைமுறைப்படுத்தல் தொடர்பில் தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் ஆண்டறிக்கை - 2023**

**01. பகிரங்க அதிகாரசபை பற்றிய விபரங்கள்**

1.1 **பெயர்** : அமைச்சரவை அலுவலகம்

1.2 **முகவரி** : லொயிட்ஸ் கட்டிடம்,
சேர் பாரோன் ஜயதிலக்க மாவத்தை,
கொழும்பு - 01

1.3 **இணையத்தளம்** : www.Cabinetoffice.gov.lk

**02. அமைச்சரவை அலுவலகமும் அதன் பணிகளும்**

அமைச்சரவை அலுவலகமானது குடியரசு அரசாங்கத்தின் நல்லாட்சியின் நெறிப்படுத்தலுக்கும் இந்நல்லாட்சி தொடர்பிலான ஆணையிடலுக்கும் உரியதாக அரசியலமைப்பின் மூலம் அமைச்சரவைக்கு கையளிக்கப்பட்டுள்ள பொறுப்புகளை நிறைவேற்றுவதற்குத் தேவையான ஒத்துழைப்புச் சேவைகளை வழங்குவதன் பொருட்டு தாபிக்கப்பட்டுள்ளது. அதிமேதகைய சனாதிபதி அவர்களினால் அல்லது அதிமேதகைய சனாதிபதி அவர்களின் பணிப்புக்கு உட்பட்டு, அமைச்சரவையினால் கையளிக்கப்படும் கடமைகளையும் பணிகளையும் புரிவதற்கும் நிறைவேற்று வதற்கும் அமைச்சரவைச் செயலாளருக்கு ஒத்துழைப்பு நல்குவது இந்த அலுவலகத்தின் பொறுப்பாகும்.

அரசியலமைப்பின் 51(2)(அ) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அதிமேதகைய சனாதிபதி அவர்களினால் நியமனம் செய்யப்படும் அமைச்சரவைச் செயலாளரானவர் அமைச்சரவை அலுவலகத்தின் தலைவராகக் கடமையாற்றுகின்றார்.

வாரந்தம் நடாத்தப்படும் அமைச்சரவைக் கூட்டங்கள், அமைச்சரவை உபகுழு கூட்டங்கள் என்பவற்றை ஒழுங்குச் செய்தல், கொள்கை அமுலாக்கம் மற்றும் குடியரசின் நெறிப்படுத்தல் என்பவற்றுக்கு உரியதாக சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் சம்பந்தமாக முறையாகவும் சரியான புரிந்துணர்வுடனும் தீர்மானங்களை எடுப்பதற்கு இயலுமாகும் வகையில் இந்த விஞ்ஞாபனங்களிலுள்ள சட்ட மற்றும் கொள்கை பின்னணிகளை ஆழமாக ஆராய்ந்து அமைச்சரவைக்கும் அமைச்சரவை உபகுழுக்களுக்கும் விடயங்களை முன்வைத்தல், அமைச்சரவை கூட்டங்களிலும் அமைச்சரவை உபகுழு கூட்டங்களிலும் எடுக்கப்பட்ட தீர்மானங்களை உள்ளடக்கிய நிகழ்ச்சிக்குறிப்புகளை மும்மொழிகளிலும் தயாரித்தல், இவற்றை அமைச்சர்களுக்கும் உரிய அமைச்சின் செயலாளர்களுக்கும் உரிய ஏனைய அதிகாரபீடங்களுக்கும் அனுப்புதல், அமைச்சரவையினால் எடுக்கப்படும் தீர்மானங்களை பொதுமக்களுக்கு அறியச்செய்வதற்கான ஊடக அறிக்கையினை தயாரித்தல், அமைச்சரவையை எதிர்வாதிகளாக்கி அமைச்சரவைக்குச் சமர்ப்பிக்கப்படும் வழக்குகள் சம்பந்தமாக நடவடிக்கை எடுத்தல் போன்றவை அமைச்சரவை அலுவலகத்தினால் நிறைவேற்றப்படும் முக்கிய பணிகளாகும்.

**03.** **2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறிந்துகொள்ளும் உரிமைச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதற்காக 2023 ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்டிருந்த அலுவலர்கள் தொடர்பிலான விபரங்கள் :**

| | |
|---|---|
| குறித்தளிக்கப்பட்ட அலுவலர் : | திரு.டபிள்யு.எம்.டி.ஜே.பெர்னாண்டோ அவர்கள்<br>அமைச்சரவை செயலாளர்<br><br>தொலைபேசி இலக்கம்: +94112329620<br>தொலைநகல் : +94112323730<br>மின்னஞ்சல் : secretary@Cabinetoffice.gov.lk |
| தகவல் அலுவலர் : | திரு.டபிள்யு.கே.வீரவர்தன<br>சிரேட்ட உதவிச் செயலாளர்<br>தொலைபேசி இலக்கம் : +94112431011<br>தொலைநகல் : +94112323730<br>மின்னஞ்சல் : info@Cabinetoffice.gov.lk,<br>: rti@Cabinetoffice.gov.lk |
| விடயத்திற்குப் பொறுப்பான முகாமைத்துவ சேவைகள் அலுவலர் : | செல்வி டபிள்யு.டீ.இஷாரி திலங்கா<br>முகாமைத்துவ சேவைகள் அலுவலர் சேவை - III |

**04.** **இணக்கம் தொடர்பிலான மீளாய்வு**

தகவல் அறிந்துகொள்ளும் உரிமைச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் கீழ் பொது மக்களினால் கோரப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் மற்றும் தீர்மானங்கள் தொடர்புபட்ட தகவல்களை வழங்குவதற்கு அமைச்சரவை அலுவலகமானது 2023 ஆம் ஆண்டிலும் வினைத்திறனுடன் நடவடிக்கை எடுத்துள்ளது.

ஏதேனும் அமைச்சரவை விஞ்ஞாபனமொன்றை அடிப்படையாக கொள்ளாத ஆயினும் "பிற கருமங்கள்" என்பதன் கீழ் அமைச்சரவையினால் கலந்துரையாடப் பட்ட விடயங்கள் சம்பந்தமாக எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மற்றும் அமைச்சரவை அலுவலகத்திலுள்ள தீர்மானங்களுடன் தொடர்புபடாத ஏனைய தகவல்கள் மாத்திரம் அமைச்சரவை அலுவலகத்தினால் இந்த சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் கீழ் பொதுமக்களுக்கு நேரடியாக வழங்கப்பட்டது.

அமைச்சரவை அலுவலகத்தின் கட்டுக்காப்பிலுள்ளதும் ஏதேனும் அமைச் சொன்றினால் / தாபனமொன்றினால் சமர்ப்பிக்கப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் / குறிப்புகள் மற்றும் இவை தொடர்பிலான தகவல்கள் 2022-03-22 ஆம் திகதியிடப்பட்டதும் 22/நானாவித(015) ஆம் இலக்கத்தைக் கொண்டதுமான அமைச்சரவைத் தீர்மானத்தின் பிரகாரம் இந்த சட்டத்தின் 29 ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளை பின்பற்றி பொதுமக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அதேபோன்று, பொதுமக்களினால் அமைச்சுக்கள் மற்றும் பகிரங்க நிறுவனங்களிட மிருந்து தகவல்களை பெற்றுக் கொள்வதற்காக கோரும் பழைய அமைச்சரவைத் தீர்மானங்களும் உரிய ஆவணங்களும் குறித்த நிறுவனங்களின் கட்டுக்காப்பில் இல்லாத சந்தர்ப்பங்களில் அமைச்சரவை அலுவலகத்திடம் கோரப்படும் சந்தர்ப்பங் களில் உரிய தகவல்களை பொதுமக்களுக்கு வழங்கக்கூடிய விதத்தில் அவை குறித்த பகிரங்க நிறுவனங்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

4.1 பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெறும் தகவல் கோரிக்கைகளை பதிவு செய்வதற்கு அமைச்சரவை அலுவலகத்தில் புறம்பான ஆவணமொன்று பேணப்பட்டு வருகின்றதோடு, தகவல் கோரிக்கை கிடைக்கப்பெற்ற திகதி, கோரிக்கையாளருடன் தொடர்புகொள்ளக்கூடிய விபரங்கள், ஒவ்வொரு தகவல் கோரிக்கை சம்பந்தமாக எடுக்கப்பட்ட தீர்மானங்கள், தகவல் வழங்கப்பட்ட திகதி, இதன் பொருட்டு கட்டணம் அறவிடப்பட்டிருந்தால் அது தொடர்பிலான தகவல்கள் என்பன உள்ளடக்கப்பட்டுள்ளன. அத்துடன் கோரிக்கை ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு கோவைகள் பேணப்பட்டும் வருகின்றது.

4.2 மேல் 4.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணையின் டிஜிட்டல் பிரதியும் இற்றைப்படுத்தி பேணப்பட்டு வருகின்றது.

4.3 அமைச்சரவை அலுவகத்தின் பதவிநிலை உத்தியோகத்தர்களின் பெயர், பதவி, தொடர்பு கொள்ளக்கூடிய தகவல்கள் என்பன பொதுமக்கள் அறிந்துக் கொள்வதற்காக அலுவகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப் பட்டுள்ளன. அத்துடன் அமைச்சரவை அலுவகத்தினால் நிறைவேற்றப்படும் பணிகள் தொடர்பிலுள்ள தகவல்களும்கூட பொதுமக்கள் அறிந்துக் கொள்வதற்காக அதில் வெளியிடப்பட்டுள்ளது.

தகவல் அறிந்துகொள்ளும் உரிமைச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் கீழ் தகவல் கோரிக்கையொன்றை நேரடியாக வந்து கைளிப்பதன் மூலமோ, தபால் மூலமோ அல்லது மின்னஞ்சல் மூலமோ அமைச்சரவை அலுவலகத்திற்கு தொடர்புபடுத்துவதற்கு பொதுமக்களுக்கு வசதி செய்யப்பட்டுள்ளது. உரிய விண்ணப்பங்கள் அலுவலக இணையத்தளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்வதற்கான வசதியும்கூட செய்யப்பட்டுள்ளது. மின்னஞ்சல் ஊடாக கிடைக்கும் தகவல் கோரிக்கைகள் சார்பில் மின்னஞ்சல் ஊடாக தகவல்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

## 05. ஆண்டினுள் கிடைக்கப்பெற்ற தகவல் அறிந்துகொள்ளும் கோரிக்கைகள் பற்றிய விபரம்:

2023 ஆம் ஆண்டில் 167 தகவல் கோரிக்கை விண்ணப்பங்களும் / கடிதங்களும் அமைச்சரவை அலுவலகத்திற்கு கிடைக்கப் பெற்றதோடு, இவற்றுள் 137 கோரிக்கைகள் சம்பந்தமாக உரிய தகவல்கள் முழுமையாகவோ அல்லது பகுதியளவிலோ நேரடியாக கோரிக்கையாளருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. கோரிக்கையொன்று சம்பந்தமாக உரிய தகவல்கள் குறித்த அமைச்சுகளிடமிருந்து பெற்றுக் கொள்வதற்கு கோரிக்கையாளர்களுக்கு வசதிகள் செய்யப்பட்டது. சட்டத்திலுள்ள ஏற்பாடுகளின் கீழ் நிராகரிக்கப்பட்ட தகவல் கோரிக்கைகளின் எண்ணிக்கை 28 ஆகும்.

சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக மூன்று (03) நாட்களுக்குள் தகவலுக்கான கோரிக்கை விண்ணப்பங்கள் ஒவ்வொன்றும் கிடைத்தமை பற்றி அறிவிப்பதற்கும் அல்லது உரிய தகவல்களை வழங்குவதற்கும் தேசிய சுவடிக் காப்புத் திணைக்களத்தில் பாதுகாக்கப்பட்டு வைக்கப்பட்டுள்ள பழைய ஆவணங்களை குறித்த திணைக்களத்திடமிருந்து மீண்டும் பெற்று வழங்குவதற்காக எடுக்கப்பட்ட காலப்பகுதி தவிர ஏனைய சகல தகவல் கோரிக்கைகள் சார்பிலும் உரிய காலப்பகுதிக்குள் பதிலளிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டன.

மூன்றாம் தரப்பொன்றுக்கு தொடர்புபடுத்தப்பட்ட கோரிக்கைகள் அடங்கலாக 2023 ஆம் ஆண்டில் கிடைக்கப்பெற்ற தகவல் கோரிக்கைகள் சம்பந்தமாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் கீழ் குறிப்பிடப்படுகின்றவாறாகும்.

| | | |
|---|---|---|
| 5.1 | ஆண்டினுள் கிடைக்கப்பெற்ற தகவலுக்கான கோரிக்கைகளின் எண்ணிக்கை | 167 |
| 5.2 | முழுமையாக தகவல் வழங்கப்பட்ட தகவலுக்கான கோரிக்கைகளின் எண்ணிக்கை | 132 |
| 5.3 | பகுதியளவில் தகவல் வழங்கப்பட்ட தகவலுக்கான கோரிக்கைகளின் எண்ணிக்கை | 04 |
| 5.4 | 2019-02-26 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கு அமைவாக உரிய அமைச்சுக்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு வசதியளிக்கப்பட்ட கோரிக்கைகளின் எண்ணிக்கை | 01 |
| 5.5 | சட்டத்தின் 5 ஆம் பிரிவுக்கு அமைவாக நிராகரிக்கப்பட்ட தகவலுக்கான கோரிக்கைகளின் எண்ணிக்கை | 19 |
| 5.6 | சட்டத்தின் 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள உரிய தகவல்கள் கட்டுக்காப்பில் இல்லாததன் காராணமாக நிராகரிக்கப்பட்ட தகவலுக்கான கோரிக்கைகளின் எண்ணிக்கை | 09 |
| 5.7 | தகவலுக்கான கோரிக்கை ஒவ்வொன்றுக்கும் பதிலளிப்பதற்கு எடுக்கப்பட்ட பொதுவான காலம் | நாட்கள் 3 - 4 |
| 5.8 | தபால் மூலம் கிடைத்த தகவலுக்கான கோரிக்கைகளின் எண்ணிக்கை | 52 |
| 5.9 | மின்னஞ்சல் மூலம் கிடைத்த தகவலுக்கான கோரிக்கைகளின் எண்ணிக்கை | 100 |
| 5.10 | தபால் அல்லது மின்னஞ்சல் தவிர வேறு வழியில் கிடைத்த தகவலுக்கான கோரிக்கைகளின் எண்ணிக்கை | 15 |

## 06. தகவலுக்கான கோரிக்கைகளின் வகைகள் - 2023

| | | | |
|---|---|---|---|
| 6.1 | **அதிகூடிய எண்ணிக்கையிலான தகவல் கோரிக்கைகளும் இரண்டாவதாக அதிகூடிய எண்ணிக்கையிலான தகவல் கோரிக்கைகளும் எவ்வகையான தகவல் கோரிக்கை தொடர்பாக கிடைத்தன:** | | |
| | 6.1.1 | அதிகூடியவை | தாபன விடயங்கள் பற்றிய அமைச் சரவைத் தீர்மானங்கள் |
| | 6.1.2 | இரண்டாவதாக அதிகூடியவை | பல்வேறுபட்ட அரச கொள்கைகள் சம்பந்தமான அமைச்சரவைத் தீர்மானங்கள் |

| 6.2 | தகவலுக்கான கோரிக்கைகளின் வகுப்பீடு | | எண்ணிக்கை |
|---|---|---|---|
| | 6.2.1 | பெறுகை நடவடிக்கைகள் | 02 |
| | 6.2.2 | தாபன விடயங்கள் | 59 |
| | 6.2.3 | அரசியல் பழிவாங்கல் | 05 |
| | 6.2.4 | நிதி | 03 |
| | 6.2.5 | சுற்றாடல் பாதுகாப்பு | 03 |
| | 6.2.6 | பல்வேறுபட்ட அரசாங்க கொள்கைகள் | 22 |
| | 6.2.7 | சட்ட விடயங்கள் | 07 |
| | 6.2.8 | பிற விடயங்கள் | 66 |
| | **மொத்தம்** | | **167** |

**07. தகவலுக்கான கோரிக்கையாளர்கள் பற்றிய விபரங்கள் - 2023**

| | | | **கோரிக்கைகளின் எண்ணிக்கை** | **நூற்றுவீதம்** |
|---|---|---|---|---|
| 7.1 | தனிநபர்களினால் மேற்கொள்ளப்பட்ட தகவலுக்கான கோரிக்கைகளின் எண்ணிக்கை | | 141 | 84% |
| 7.2 | நிறுவனங்களினால் அல்லது நிறுவனங்களை பிரதிநிதித்துவப்படுத்தி மேற்கொள்ளப்பட்ட தகவலுக்கான கோரிக்கைகளின் எண்ணிக்கை | | 26 | 16% |
| 7.3 | **மாகாணங்கள் ரீதியாக கிடைக்கப்பெற்ற தகவலுக்கான கோரிக்கைகள்** | | | |
| | 7.3.1 | மத்திய மாகாணம் | 15 | 9% |
| | 7.3.2 | கிழக்கு மாகாணம் | 04 | 2% |
| | 7.3.3 | வடமத்திய மாகாணம் | 06 | 4% |
| | 7.3.4 | வட மாகாணம் | 01 | 1% |
| | 7.3.5 | வடமேல் மாகாணம் | 05 | 3% |
| | 7.3.6 | சப்பிரகமுவ மாகாணம் | 05 | 3% |
| | 7.3.7 | தென் மாகாணம் | 11 | 7% |
| | 7.3.8 | ஊவா மாகாணம் | 04 | 2% |
| | 7.3.9 | மேல் மாகாணம் | 108 | 65% |
| | 7.3.10 | வதிவு திட்டவட்டமாக குறிப்பிட்டிருக்காமை | 08 | 5% |
| | 7.3.11 | புலம்பெயர் இலங்கையர்கள் | 00 | 0% |

**08.** தகவல் கோரிக்கை நிராகரிக்கப்பட்டதன் காரணமாக எவரேனும் ஒருவருக்கு எதிராக தண்டனை விதித்தல் / ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தலானது 2023 ஆம் ஆண்டில் இந்த அலுவகத்திற்குரியதாக மேற்கொள்ளப்படவில்லை.

## 09. மேன்முறையீடுகளும் ஆணைக்குழுவின் ஆலோசனைகளும்

கோரப்பட்ட தகவல்கள் வழங்கப்படாமை அல்லது உரிய காலப்பகுதியினை பின்பற்றாமை சம்பந்தமாக 10 மேன்முறையீடுகள் குறித்தளிக்கப்பட்ட அலுவலராக அமைச்சரவைச் செயலாளருக்கு 2023 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இதில் மேன்முறையீடொன்று மேன்முறையீட்டாளரினால் ஆரம்ப சந்தர்ப்பத்திலேயே மீளப் பெறப்பட்டுள்ளது.

பரிசீலனை செய்யப்பட்ட மீதி 09 மேன்முறையீடுகளிலிருந்து 05 மேன்முறை யீடுகள் இந்த சட்டத்தின் 31(1)(ஈ) ஆம் பிரிவின் கீழ் பூர்த்தியற்ற, தவறாக இட்டுச் செல்லும் அல்லது பொய்யான தகவல் அளிப்பு என்னும் விடயங்களை அடிப்படையாக கொண்டுள்ளதோடு, மேலும் 03 மேன்முறையீடுகளாவன கோரப்பட்ட தகவல்கள் உரிய காலப்பகுதிக்குள் வழங்க தவறியமை பற்றி குறிப்பிட்டு முன்வைக்கப்பட்டிருந்தது. ஆயினும் எஞ்சிய மேன்முறையீட்டில் திட்டவட்டமான காரணங்கள் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

இந்த 09 மேன்முறையீடுகள் சம்பந்தமாக குறித்தளிக்கப்பட்ட அலுவலராக அமைச்சரவைச் செயலாளரினால் வழங்கப்பட்ட தகவல்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மூலம் மேன்முறையீட்டாளர்கள் திருப்தியடைந்தனர்.

| **குறித்தளிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு செய்யப்பட்ட மேன்முறையீடு** | | **எண்ணிக்கை** |
|---|---|---|
| 9.1 | குறித்தளிக்கப்பட்ட உத்தியோகத்தருக்கு செய்யப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | 09 |
| 9.2 | குறித்தளிக்கப்பட்ட அலுவலரின் ஆலோசனையின் மீது தகவல் வழங்கப்பட்ட அல்லது உரிய அமைச்சுக் களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | 9 |
| **தகவல் அறியும் உரிமைக்கான ஆணைக்குழுவுக்கு செய்யப்பட்ட மேன்முறையீடுகள்** | | |
| 9.3 | பகிரங்க அதிகாரசபைக்கு அறிவிக்கப்பட்ட மற்றும் தகவலுக்கான கோரிக்கை நிராகரிக்கப்பட்டமையினால் ஆணைக்குழுவுக்கு முன்வைக்கப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | 00 |
| 9.4 | உரிய தகவல்களை வழங்குமாறு ஆணைக்குழுவினால் கட்டளை வழங்கப்பட்ட / ஆலோசனை வழங்கப்பட்ட சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | 00 |

## 10. தகவல்கள் முகாமைத்துவமும் அறிக்கைகளை பேணுதலும்

### 10.1 தகவல் முகாமைத்துவம் மற்றும் தரவு களஞ்சிய முறைமை பற்றிய விபரம்

கோரிக்கையாளர்களிடமிருந்து அன்றாடம் கிடைக்கப்பெறும் தகவல் கோரிக்கைக்கான விண்ணப்பங்கள், ஆவணங்கள் என்பவற்றை இலக்க மிடுவதற்கு பதிவு இடாப்பொன்று பேணப்படுவதோடு, இந்த தகவலுக்கான கோரிக்கைகள் அனைத்தும் பொதுவாக கோவைப்படுத்துவதற்கும் கனணி சார்ந்த தரவுகளாகவும் பேணுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

2006 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையிலான அமைச்சரவைத் தீர்மானங்களும் ஏனைய ஆவணங்கள் உள்ளடக்கப்பட்ட கோப்புகளும் அமைச்சரவை அலுவகத்தினால் முகாமிக்கப்பட்டு வருகின்றது. 2006 ஆம் ஆண்டிற்கு முன்னைய அமைச்சரவைத் தீர்மானங்களும் விஞ்ஞாபனங்களும் கோப்பிடப்பட்ட கோவைகள் அவற்றை பரிசீலனை செய்யும் உரிமையுடன் பாதுகாப்பதற்காக தேசிய சுவடிக்கூட திணைக்களத்திற்கு கையளிக்கப் பட்டுள்ளது.

1947 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை நடாத்தப்பட்ட அமைச்சரவைக் கூட்டங்களுக்கான நிகழ்ச்சிக் குறிப்புகள் களஞ்சியப்படுத்தி பேணப்பட்டு வருகின்றன. 1992 ஆம் ஆண்டிலிருந்து இதுவரையிலுள்ள அமைச்சரவைத் தீர்மானங்களை இலகுவாக கண்டறிவதற்கு அலுவகத்தினாலேயே உருவாக் கப்பட்ட இரண்டு (02) மென்பொருட்கள் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் மற்றும் தீர்மானங்களின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதிகளை பேணும் முறையானது 2019 ஆம் ஆண்டிலிருந்து ஆரம்பிக்கப்பட்டது.

அத்துடன், பழைய அமைச்சரவைத் தீர்மானங்கள் மற்றும் உரிய ஆவணங்கள் தேசிய சுவடிக்கூட திணைக்களத்திற்கு கையளிப்பதற்கு முன்னர் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதிகளை பெற்றுக் கொள்வதற்கும் படிபடியாக 2005 ஆம் ஆண்டிலிருந்து 2018 ஆம் ஆண்டுவரையிலான அமைச்சரவைத் தீர்மானங்கள் மற்றும் உரிய ஆவணங்களை ஸ்கேன் செய்து மின்னணு பிரதிகளாகப் பேணுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதோடு, இதன் ஊடாக பழைய ஆவணங்கள் வழங்குதலை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

### 10.2 ஆண்டினுள் உரிய முறைமையானது இற்றைப்படுத்தப்பட்டதா? அவ்வாறாயின் அது தொடர்பிலான விபரங்கள்:

இற்றைப்படுத்தப்பட்டுள்ளது.

ஆண்டினுள் கிடைக்கப்பெற்ற அமைச்சரவைப் பத்திரங்கள் மற்றும் இது தொடர்பில் எடுக்கப்பட்ட அமைச்சரவைத் தீர்மானங்கள் உரிய அமைச் சரவை கூட்டங்களுக்கான நிகழ்ச்சிக்குறிப்புகளுடன் கோப்பிடப் பட்டுள்ளதோடு, இலகுவாக அனுகும் பொருட்டு ஸ்கேன் செய்யப்பட்ட பிரதிகளும் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

இந்த தகவல் கோரிக்கைகளுக்குரியதாக மேற்கொள்ளப்பட்ட சகல தொடர்பு களும் வன் மற்றும் மென் ஆவணங்கள் என்னும் இரண்டு விதத்திலும் தகவல் முறைமையியினுள் இற்றைப்படுத்தப்பட்டுள்ளன.

10.3 **அறிக்கைகள் பாதுகாக்கப்படும் முறை:**

மின்னணு தரவு முறைமை மற்றும் ஆவணங்களை கோப்பிடுதல் என்பன மூலமாகும்.

10.4 **அறிக்கைகள் குறியிலக்கங்களுடன் அட்டவணைப்படுத்தப்பட்டு இலகுவாக மீள பெறக்கூடிய விதத்தில் களஞ்சியப்படுத்தி வைக்கப்பட்டுள்ளனவா?**

ஆம்

10.5 **மேற்குறிப்பிட்ட குறியிலக்கங்கள், அட்டவணைப்படுத்தல் என்பவற்றுக்கு ஆண்டினுள் மேற்கொள்ளப்பட்ட மேலதிக விருத்திகள் மற்றும் மாற்றங்கள்:**

கிடைக்கக்கூடியதாகவுள்ள கனணி மென்பொருட்கள் புதியவற்றுடன் மேம்படுத்துதல் மற்றும் இற்றைப்படுத்துதல்.

10.6 **பதிவேட்டகத்திலுள்ள அறிக்கையொன்றை தேடிப்பெறுவதற்கு தேவைப்படும் காலம் -**

சுமார் 05 நிமிடங்கள்

10.7 **பௌதிக தரவு களஞ்சியம் சம்பந்தமான உரிய அறிக்கைகள் நிறுவனத்தில் / நிறுவனத்திற்கு வெளியே அல்லது இந்த இரண்டு விதத்திலும் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளனவா?**

இரண்டு விதத்திலும் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

இட வசதிகளை முகாமிக்கும் நோக்கில் 2008 ஆம் ஆண்டிற்கு முன்னைய அமைச்சரவைத் தீர்மானங்களுக்குரிய ஆவணங்களை பாதுகாப்பதற்காக தேசிய சுவடிக்கூட திணைக்களத்திடம் கையளிக்கப்பட்டுள்ளமையினால், பல்வேறுபட்ட அரசாங்க நிறுவனங்களின் கோரிக்கைகளுக்கு அமைவாகவும் தகவல் அறிந்துகொள்ளும் உரிமைச் சட்டத்தின் கீழ் கோரிக்கையாளர்கள் பழைய தகவல்களை கோரும் சந்தர்ப்பத்திலும் இந்த ஆவணங்கள் தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்திடமிருந்து மீள பெற்றுக் கொள்ளப்பட்டதன் பின்னர் தகவல் கோரிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கு இந்த அலுவகத்தினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தேசிய சுவடிக்கூடத் திணைக்களத்திற்கு கையளிப்பதற்கு முன்னர் ஆவணங்கள் ஸ்கேன் செய்வதன் மூலம் பழைய அமைச்சரவைத் தீர்மானங்களுக்குரிய ஆவணங்களை வழங்கும் செயற்பாட்டினை வினைத்திறனுடன் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அடிக்கடி பெற்றுக்கொள்ளப்படுவதும் பாதுகாக்கப்படும் பொருட்டும் ஏற்கனவே கையளிக்கப்பட்டுள்ள ஆவனங்களும் ஸ்கேன் செய்யப்பட்டு களஞ்சியப்படுத்தப்படுகின்றன.

10.8 **கிடைக்கக்கூடியதாகவுள்ள அறிக்கைகள் 10 வருடங்கள் வரையும் புதிய அறிக்கைகள் 12 வருடங்கள் வரையும் பேணுவதற்குத் தேவையான வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளனவா?**

ஆம்

2008 ஆம் ஆண்டிற்கு முன்னைய அமைச்சரவைத் தீர்மானங்கள், விஞ்ஞாபனங்கள் மற்றும் இது தொடர்பிலான ஆவணங்கள் பௌதிக மற்றும் டிஜிட்டல் ஆவணப்படுத்தல் மூலம் துரிதமாக பெற்றுக் கொள்ளக்கூடிய விதத்தில் அமைச்சரவை அலுவலகத்தில் களஞ்சியப் படுத்தப்பட்டுள்ளதோடு, புதிய அறிக்கைகள் மற்றும் ஆவணங்களும் பௌதிக மற்றும் டிஜிட்டல் முறைகள் ஊடாக 12 வருடங்களுக்கு மேல் பராமரிப்பதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

10.9 **தகவல்களை களஞ்சியப்படுத்தி வைப்பதற்கும் முகாமிப்பதற்கும் வரவுசெலவுத்திட்ட நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா?**

இந்த நோக்கம் கருதி விசேட நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்படாத போதிலும் அலுவகத்திற்காக ஒதுக்கப்படும் வருடாந்த வரவுசெலவுத்திட்ட நிதி ஏற்பாட்டிற்குள் தேவையான செலவுகள் முகாமித்துக் கொள்ளப்படுகின்றது.

10.10 **அறிக்கைகள் டிஜிட்டல் முறையில் பேணப்படவில்லையாயின் இந்த அறிக்கைகளை டிஜிட்டல் முறைக்கு மாற்றுவதற்கு இந்த ஆண்டில் எடுக்கப்பட்ட அல்லது பிரேரிக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் எவை?**

ஏற்புடையதாகாது

10.11 **அறிக்கைகள் டிஜிட்டல் முறையின் ஊடாக களஞ்சியப்படுத்தப் பட்டிருப்பின் தொடர்புபட்ட பணியானது பங்கிரங்க அதிகாரசபையினால் அல்லது வெளிவாரி தரப்பொன்றினால் மேற்கொள்ளப்பட்டதா என்பது பற்றி.**

அலுவலக பதவியணியினர்களினால் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

10.12 **டிஜிட்டல் முறையிலுள்ள தரவுகள் / அறிக்கைகளுக்கு இணையத்தின் ஊடாக உள்நுழைய முடியுமா?**

டிஜிட்டல் மூலம் உள்ள சில தரவுகள் மற்றும் அறிக்கைகள் மாத்திரம் இந்த அலுவகத்தின் இணையத்தளமான www.cabinetoffice.gov.lk இன் ஊடாக பெற்றுக் கொள்ளமுடியும்.

10.13 **அவ்வாறாயின் ஆகக்குறைந்தது மாதத்திற்கு ஒருமுறையாவது இணையப் பாதுகாப்பு இற்றைப்படுத்தப்படுகின்றதா?**

ஆம்

11. **அறிக்கைகளை பேணுதல், முகாமை செய்தல் மற்றும் அது தொடர்பிலான தடைகளை தவிர்ப்பதற்கான பரிந்துரைகள்**

அரசாங்க நிறுவனங்களுக்கிடையில் ஆவணங்களை பரிமாறிக் கொள்வது இயலுமானவரை டிஜிட்டல் வழிமுறையினூடாக மேற்கொள்வதன் மூலம் அறிக்கைகளை பேணுதல் உட்பட முகாமித்தல் போன்றவற்றை வினைத்திறனுடனும் பயனுள்ள வகையிலும் மேற்கொள்ள முடியும்.

இந்த அலுவகத்தின் செயற்பாடுகளுக்கு அமைவாக எழிமையான மென்பொருள் பயன்பாடானது தகவல்கள் மற்றும் அறிக்கைகளை பரிசீலனை செய்வதற்கு இலகுபடுத்துவதோடு, இயலுமான சகல சந்தர்ப்பங்களிலும் ஆவணங்களின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதிகளை வைத்துக் கொள்வது அலுவக இடவசதியினை முகாமித்துக் கொள்வதற்கும் தகவல்களை துரிதமாக தேடிப்பெறுவதற்கும் வழங்குவதற்கும் உதவுகின்றது.

12. **தகவல்களை அறிந்து கொள்வதற்கு பிரசைகளுக்கு கிடைக்கக் கூடியதாகவுள்ள வசதிகள்**

தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்க்கும் பிரசைகளுக்கு தமது தேவையினை இந்த அலுவலகத்திற்கு நேரடியாக வந்து கையளிப்பதன் ஊடாகவோ, தபால் மூலம் அனுப்புவதற்கோ, 011-2323730 என்னும் இலக்கத்திற்கு தொலைநகல் ஊடாக அல்லது rti@cabinetoffice.gov.lk என்னும் மின்னஞ்சல் ஊடாக மின்னஞ்சல்களை அனுப்பியோ 011-2431011 என்னும் தொலைபேசி இலக்கத்தின் மூலம் தகவல் உத்தியோகத்தரை அழைப்பதன் மூலமோ தேவையான தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கான பதில்கள் மின்னஞ்சல், தபால், பதிவுத்தபால் மூலமோ அல்லது நேரடியாக வந்து பெற்றுக் கொள்வதற்கான வழிமுறைகள் செய்யப்பட்டுள்ளன.

தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு அமைச்சரவை அலுவலகத்திற்கு வருகைதரும் பிரசைகளுக்கு தமது தகவல் கோரிக்கைக்கான விண்ணப்பங்களை (RTI 01) கையளிப்பதற்கும் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு வழிகாட்டல்களை செய்வதற்கும் இந்த அலுவலகத்தின் கருமபீடத்தில் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

தகவல் பெற்றுக்கொள்ளும் போது பின்பற்றப்படவேண்டிய படிமுறை, இதன் பொருட்டு பயன்படுத்தப்படவேண்டிய விண்ணப்பங்கள், சட்டத்தை நடைமுறைப் படுத்துவது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள விசேட வர்த்தமானிகள் போன்ற சகல விபரங்களும் பிரசைகளுக்கு அறிந்து கொள்வதற்கு இலகுவாக மும்மொழிகளிலும் அமைச்சரவை அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.Cabinetoffice.gov.lk ஊடாக வெளியிடப்பட்டுள்ளது.

அதேபோன்று கோரப்பட்ட தகவல்களை வழங்குவதற்கு இயலுமான சகல சந்தர்ப்பங்களிலும் உரிய ஆவணங்கள் ஸ்கேன் செய்யப்பட்டு மின்னஞ்சல் ஊடாக நேரடியாகவோ அல்லது உரிய அமைச்சின் ஊடாகவோ வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இவற்றுக்கு மேலதிகமாக சகல அமைச்சர்களினதும் பெயர் பட்டியலும் தொடர்பு கொள்ளக்கூடிய தகவல்களும் சகல அமைச்சுக்கள் மற்றும் அமைச்சுக்களின் செயலாளர்களின் தொடர்புகொள்ளக்கூடிய தகவல்களும் இற்றைப்படுத்தப்பட்டு அமைச்சரவை அலுவகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.Cabinetoffice.gov.lk யில் வெளியிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அமைச்சரவை விஞ்ஞாபனங்கள் / குறிப்புகள் சமர்ப்பித்தல் தொடர்பிலான வழிகாட்டல்கள் பொது மக்கள் அறிந்துக்கொள்வதன் பொருட்டு அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளன. வாராந்தம் நடாத்தப்படும் அமைச்சரவைக் கூட்டங்களில் எடுக்கப்படும் தகவல் ரீதியிலான பெறுமதிமிக்க தீர்மானங்கள் பொதுமக்கள் அறிந்துக்கொள்ளும் ஊடக அறிக்கையும் அலுவலகத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தில் மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ளன.

## 13. தகவல் கோரிக்கைகளுக்கான கட்டணங்களாக 2023 ஆண்டில் அறவிடப்பட்ட கட்டணங்கள்

2023 ஆம் ஆண்டில் இந்த அலுவலகத்தினால் நேரடியாக கையளிக்கப்பட்ட தகவல்கள் நான்கு பக்கங்களை விட கூடுதலான பிரதி ஆவணங்களுக்கு கட்டணமாக 2,196.00 ரூபா திரட்டப்பட்டுள்ளது.

## 14. தகவல் அறிந்துகொள்ளும் உரிமைச் சட்டத்தின் செயற்பாடு மற்றும் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்கான ஆலோசனைகள்

* முன்னதாகவே தகவல்களை வெளிப்படுத்துவது அழுத்தத்தை ஏற்படுத்தும் நோக்கில் அரசாங்க நிறுவனங்கள் அவற்றின் இணையத்தளங்களுக்கு மேலதிகமாக உத்தியோகபூர்வ சமூக வலைத்தள கணக்குளை ஊக்குவிப்பது பொருத்தமானதாகும். பொதுமக்களின் அன்றாட நடவடிக்கைகளோடு தொடர்புபட்ட சேவைகளை வழங்கும் நிறுவனங்களுக்கு இதனை கட்டாயமாக்குதல் பொருத்தமானதாகும்.

* தகவல் அறிந்துகொள்ளும் உரிமைச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகள் ஏற்புடைத்தானவாறு தாபன விதிக்கோவை மற்றும் பெறுகை வழிகாட்டல் என்பவற்றை திருத்துவதன் மூலம் இந்த சட்டத்திலுள்ள ஏற்பாடுகளை அமுல்படுத்தும் போது தற்போதுள்ள நடைமுறை குறைபாடுகளை தவிர்க்கலாம்.

* கடதாசி விலை மற்றும் தபால் கட்டணம் என்பன அதிகரித்துள்ளமையினை கவனத்திற்கு எடுத்துக் கொண்டு தகவல் கோரிக்கையின் போதும் வழங்கும் போதும் அரசாங்கத்திற்கு ஏற்கவேண்டி நேரிடும் செலவுச் சுமையினை கவனத்திற்கு எடுத்துக்கொண்டு, இயலுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் மின்னஞ்சல் மூலம் தகவல் கோரிக்கைகளை முன்வைப்பதற்கு பிரசைகளை ஊக்குவிப்பது பொருத்தமானதாகும்.

* 2022 ஆம் ஆண்டின் 9 ஆம் இலக்க தனிப்பட்ட தரவு பாதுகாப்பு சட்டத்திலுள்ள ஏற்பாடுகளாவன 2016 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க தகவல் அறிந்துகொள்ளும் உரிமைச் சட்டத்தை நடைமுறைப்படுத்தும் போது தாக்கத்தை செலுத்தும் விதம் பற்றி தகவல் உத்தியோகத்தர்களுக்கு அறியச் செய்விப்பது பொருத்தமானதாகும்.

ஒப்பம் -

பெயர் - **டபிள்யு.எம்.டி.ஜே.பெர்னாண்டோ**
பதவி - **அமைச்சரவைச் செயலாளர் / குறித்தளிக்கப்பட்ட அலுவலர்**
திகதி - **2025**